செ.வெ.எண்:44 நாள்16.07.2017

# தூத்துக்குடி மாநகராட்சியில் பக்கிள் ஓடை சுத்தப்படுத்தும் பணியை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாநகராட்சியில் இன்று (16.07.2017) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ்.இ.ஆ.ப., ஆகியோர்கள் மாநகராட்சி ஆணையர் டாக்டர்.அல்பி ஜாண் வர்க்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பக்கிள் ஓடை சுத்தப்படுத்தும் பணியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வின்போது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்கள் தெரிவித்ததாவது:

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் நகர்ப்புற வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை தீட்டி வெற்றிகரமாக செயல்படுத்தினார்கள். அதுவும் நகர்ப்புற சுகாதார வளர்ச்சிக்கென பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

தூத்துக்குடி மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பக்கிள் ஓடையானது எப்.சி.ஐ.குடோன் அருகில் துவங்கி திரேஸ்புரம் பகுதியில் உள்ள கடற்கரை வரை சென்றடைகிறது. மேற்படி பக்கிள் ஓடை செல்லும் பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து வெளியேறும் கழிவுநீரானது பக்கிள் ஓடை வழியாக திரேஸ்புரம் கடற்கரையில் சென்றடைகிறது. பக்கிள் ஓடையின் நீளம் 7.28 கி.மீ, அகலம் 7மீ, ஆழம் 1.5 மீ முதல் 2மீ வரை உள்ளது. அதில் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் கடப்பதற்காக 18 பாலங்கள் உள்ளது. பக்கிள் ஓடையை சுத்தம் செய்யும் பணியானது மாநகராட்சியால் ஏற்கனவே ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. இது வரை 3கிமீ தூரத்திற்கு கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

பக்கிள் ஓடையை தூய்மைபடுத்துவதற்கான நிரந்தர தீர்வுகாண இரண்டு புறமும் குப்பைகளை ஓடையில் போடாதவாறு பொது மக்களின் வசதிக்காக குப்பை தொட்டிகள் அமைக்கப்பட உள்ளது. மீறி குப்பைகளை கொட்டுபவர்களை கண்காணிப்பதற்காக C.C.TV கேமரா அமைக்கப்படவுள்ளது.

தற்போது பக்கிள் ஓடை வழியாக செல்லும் கழிவுநீரானது திரேஸ்புரம் கடற்கரை முகத்துவாரத்தில் தேங்குவதை தடுக்கும் விதமாகவும், தொற்றுநோய்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் விதமாகவும், எதிர்வரும் மழை வெள்ளம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திரேஸ்புரம் கடற்கரையில் பக்கிள் ஓடை கழிவுநீர் கலக்கும் முகத்துவாரத்தில் காணப்படும் கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியானது இன்னும் இரண்டு வாரங்களில் முடிவடையும். தூத்துக்குடி மாநகராட்சி சுகாதார வளர்ச்சியில் பொதுமக்களின் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது. பொதுமக்கள் எப்போதும் மாநகராட்சி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். பொதுமக்கள் பக்கிள் ஓடையில் குப்பை தேங்காதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். மாநகராட்சி நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்றார்.

ஆய்வின் போது முன்னாள் அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சுந்தர்ராஜ், மாநகராட்சி செயற்பொறியாளர் திரு.ருபன் சுரேஷ் பொன்னையா உட்பட பலர் உடன் இருந்தனர்.

முன்னதாக மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜு அவர்கள் மில்லர்புரம் அருள்மிகு வேம்படி இசக்கியம்மன் திருக்கோயில் மகா கும்பாவிஷேக விழாவில் கலந்துகொண்டார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.